**CC.No.435 /2022 (JM.No.II, DHARMAPURI.)**

**08.05.2025**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர்)**

**PW34:திரு.ராஜா த/பெ.சாமிநாதன்**

**முதல் விசாரணையின் தொடர்ச்சி**

நகை மதிப்பீட்டாளர் சுரேஷ் (எ) சாமி ஆச்சாரி த/பெ. சின்னசாமி என்பவரை சங்க தீர்மான புத்தம் 15.09.2009 முதல் 22.03.2012 வரை உள்ளதில் பக்கம் 7 ல் தீர்மானம் எண்.2ல் நாள்.16.10.2009 ன் படி கமிஷன் அடிப்படையில் நகை மதிப்பீட்டாளராக நியமிக்கப்பட்டுள்ளது. அந்த **தீர்மானம் –2 அ.த.சா.112 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. மேற்படி தேதியில் மேற்படி தீர்மான புத்தகத்தில் தீர்மானம் பக்கம் 7 ல் தீர்மானம் 3–ல் சுரேஷ்(எ) சாமி ஆச்சாரி என்பவரை 16.10.2009 முதல் கமிஷன் அடிப்படையில் நியமித்துகொள்ளலாம் எனவும், இவரிடம் ஒரு லட்சத்திற்கு fidelity guaranty மற்றும் இரண்டு நபர்களிடம் தலா ஒரு லட்சம் வீதம் நபர் ஜாமீன் பத்திரம் பெற்றுக்கொண்டும், இவரால் பெறப்பட்டு சான்று அளிக்கப்பட்டு ஈடு வைக்கப்படும் நகைகளில் ஏதேனும் முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டால் அதற்கு நகை மதிப்பீட்டாளரே முழு பொறுப்பாளர் என பொறுப்பு நிர்ணயித்து இவரை சங்கத்தில் தற்காலிகமாக நகை மதிப்பீட்டாளராக நியமிக்கப்பட்டுள்ளது. அந்த **தீர்மானம் –3 அ.த.சா.ஆ.113** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவர் 16.10.2009 முதல் 01.09.2013 வரை சங்கத்தில் பணி செய்துள்ளார். அவர் பணி செய்த காலத்தில் சங்கத்தில் சேமிப்பு கணக்கு துவங்கப்பட்டு வரவு செலவு செய்துள்ளார்.

2.நான் விசாரணை மேற்கொண்டதில் ஆவணங்களை பார்வையிட்டதிலும், பொன்னேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 22.03.2012 முதல் 06.08.2013 வரையிலான காலத்தில் முன்னாள் செயலாளர் ஜெயந்தி, முன்னாள் எழுத்தர்/காசாளர் முருகன் ஆகியோர்கள் சங்கத்தில் பணி செய்தற்கான சங்க வருகை பதிவேட்டில் கையொப்பம் செய்துள்ளார். **ஜனவரி 2012 முதல் டிசம்பர் 2013 வரையுள்ள சங்க பணியாளர் வருகை பதிவேடு அ.சா.ஆ.114** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்கண்ட குற்ற நிகழ்வு காலத்தில் 19.07.2012 முதல் 29.05.2013 வரையில் 37 கடன்தாரர்களின் பேரில் போலி நகைகள் வைத்து போலி ஆவணங்கள் தயாரித்து பொய் கணக்கு எழுதி நம்பிக்கை மோசடி செய்து சங்கத்திற்கு நிதி ரூ.17,76,400/–அளவிற்கும், 3 நபர்களிடம் 22.03.2012 முதல் 30.03.2013 வரையிலான காலத்தில் அடமானமாக பெறப்பட்ட உண்மையான நகைகளை அபகரித்து அதற்கு

ஈடாக போலி நகைகள் ஈடு வைத்து ரூ. 1,85,830/- அளவிற்கும், 16.03.2013 ம் தேதி ஒரு கடன் தாரரிடம் பெற்ற உண்மையான அடமான நகைகளை கையாடல் செய்துவிட்டு அதற்கான தொகை ரூ.2,94,000/- அளவிற்கும் மற்றும் 15.05.2013 முதல் 06.08.2013 முடிய நகைகள் இல்லாமல் நகைக்கடன் வழங்கியதாக போலி ஆவணங்கள் தயாரித்து பொய் கணக்கு எழுதி ரூ.11,01,000/- ஆக மொத்தம் ரூ.33,57,230/- அளவிற்கு சங்கத்தின் செயலாளர் ஜெயந்தி, முதுநிலைஎழுத்தர்/காசாளர்.முருகன், சங்கத்தின் நகை மதிப்பீட்டாளர் சாமிஆச்சாரி ஆகிய மூவரும் கூட்டாக சேர்ந்து சங்க நிதியை கையாடல் செய்து சங்கத்திற்கு நிதியிழப்பை ஏற்படுத்தியதாக எனது விசாரணையில் கண்டறியப்பட்டது. மேற்படி குற்றமிழைத்தவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள எனது விசாரணை அறிக்கையில் பரிந்துரை செய்து விசாரணை அறிக்கையை சமர்பித்தேன். **நான் சமர்ப்பித்த விசாரணை அறிக்கை அ.சா.ஆ.115** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>இனம்-1:</u>**

பொன்னேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 19.07.2012 முதல் 29.05.2013 வரையிலான காலத்தில் 37 கடன்தாரர்களின் பேரில் போலி நகைகள் வைத்து போலி ஆவணங்கள் தயாரித்து பொய் கணக்கு எழுதி நம்பிக்கை மோசடி செய்து சங்கத்தின் நிதி ரூ.17,76,400/- அளவிற்கு சங்க பணியாளர்கள் ஜெயந்தி செயலாளர், முருகன் முதுநிலை எழுத்தர்/காசாளர், சாமி ஆச்சாரி நகை மதிப்பீட்டாளர் ஆகியோர்கள் கூட்டாக சேர்ந்து சங்க நிதியை கையாடல் செய்துள்ளார்கள்.

**<u>1) கையாடல் ரூ.28,000/-</u>**

03.09.2012 அன்றில் நகைகடன் எண்.2202 ன் படி திரு.சற்குணம் என்பவரின் பெயரில் 'O' கொக்கி பாக்ஸ் மாடல் செயின் -1 அடமானம் பேரில் ரூ.28,000/- நகை கடன் வழங்கியதாக நகைகடன் பேரேடு பக்கம் 173/1 ல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த **நகைகடன் பேரேடு பக்கம் 173/1 ல் பதிவுகள் அ.சா.ஆ.116** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நாள்வழிப்பேரேடு பக்கம் 187/2 ல் நகை கடன் ரூ.28,000/- வழங்கியதாக கையிருப்பு குறைக்கப்பட்டுள்ளது. **02.04.2012 முதல் 30.11.2012 வரையுள்ள நாள்வழிப்பேரேடு- 2 பக்கம் எண்.187 ல் ரூ.28,000/- அ.சா.ஆ.117** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நாள்வழிப்பேரேட்டினை திரு.முருகன் எழுத்தர்/முதுநிலை எழுத்தர்/ காசாளர் எழுதி இவர் மற்றும் செயலர் திருமதி.ஜெயந்தி இருவரும் கையொப்பமிட்டுள்ளனர். நகைக்கடன் பதிவேட்டில் எழுத்தர்/முதுநிலைஎழுத்தர்/காசாளர் மற்றும் நகை மதிப்பீட்டாளர் திரு.சி.சாமி ஆச்சாரி ஆகியோர்

கையொப்பமிட்டுள்ளனர். கடன்தாரர் என்ற இடத்தில் சற்குணம் என கையொப்பம் உள்ளது. கடன் பற்று சீட்டில் நகை கடன் ரூ.28,000/– வழங்கியதாக முதுநிலை எழுத்தர்/காசாளர் அனுமதித்து கையொப்பமிட்டுள்ளார். அந்த **பற்றுச் சீட்டு அ.சா.ஆ 118** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நகைக்கடன் பற்றுச் சீட்டில் கடன் வாங்குபவர் என்ற இடத்திலும் மற்றும் நகைக்கடன் பத்திரத்திலும், சற்குணம் என கையொப்பம் உள்ளது. நகைக்கடன் பத்திரம் பூர்த்தி செய்யப்படவில்லை. **பூர்த்தி செய்யப்படாத நகைக்கடன் விண்ணப்பம் அ.சா.ஆ.119** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நகைக்கடன் விண்ணப்பத்தில் நகைகளுக்கு பொறுப்பான செயலர், முதுநிலை எழுத்தர், காசாளர், நகை மதிப்பீட்டாளர் எவரும் கையொப்பம் இடவில்லை. 25.09.2013 அன்று சங்க தலைவர், இயக்குனர்கள், களமேலாளர் அரூர் மற்றும் சங்க பணியாளர்கள் ஆகியோர் முன்னிலையில் திரு. பூவரசன் நகை மதிப்பீட்டாளரை வைத்து பாதுகாப்பு பெட்டகத்தில் உள்ள அடமான நகைகளை 100 சதவீதம் இருப்பு பரிசோதனை செய்த போது மேற்படி சற்குணம் என்பவர் பெயரில் வைக்கப்பட்ட அடமான நகைகள் போலி என்பதையும், பொய் ஆவணங்கள் தயாரித்து நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளதையும் அறிந்தேன். இந்த போலி நகைகள் என்னால் கைப்பற்றப்பட்டுள்ளது. திரு.சற்குணம் என்பவரை விசாரிக்க அழைப்பாணை அனுப்பபட்டதில் விலாசத்தாரர் வேப்பம்பட்டியில் இல்லை என்று தெரிவித்து தபால் திரும்ப பெறப்பட்டுள்ளது. அந்த **திருப்பப்பட்ட தபால் அ.சா.ஆ.120** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதிலிருந்து மேற்கண்டவாறு போலி நகைகள் வைத்து கையிருப்பு குறைத்து கையாடல் செய்துள்ளது விசாரணையில் ஊர்ஜிதமாகிறது.

**2) கையாடல் ரூ.14,000/–**

03.10.2012 அன்றில் நகைகடன் எண்.2238 ன் படி திரு.சங்கர் என்பவரின் பெயரில் 'O' கொக்கி பாக்ஸ் மாடல் செயின் –1 அடமானம் பேரில் ரூ.14,000/– நகை கடன் வழங்கியதாக நகைகடன் பேரேடு பக்கம் 09/2 ல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த **நகைகடன் பேரேடு பக்கம் 09/2 ல் பதிவுகள் அ.சா.ஆ.121** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நாள்வழிப்பேரேடு பக்கம் 234/2 ல் நகை கடன் ரூ.14,000/– வழங்கியதாக கையிருப்பு குறைக்கப்பட்டுள்ளது. **02.04.2012 முதல் 30.11.2012 வரையுள்ள நாள்வழிப்பேரேடு– 2 பக்கம் எண்.234 ல் ரூ.14,000/– அ.சா.ஆ.122** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நாள்வழிப்பேரேட்டினை திரு.முருகன் எழுத்தர்/முதுநிலை எழுத்தர்/ காசாளர் எழுதி இவர் மற்றும் செயலர் திருமதி.ஜெயந்தி இருவரும் கையொப்பமிட்டுள்ளனர். நகைக்கடன் பதிவேட்டில் எழுத்தர்/முதுநிலைஎழுத்தர்/காசாளர் மற்றும் நகை மதிப்பீட்டாளர் திரு.சி.சாமிஆச்சாரி ஆகியோர்

கையொப்பமிட்டுள்ளனர். கடன்தாரர் என்ற இடத்தில் சங்கர் என கையொப்பம் உள்ளது. கடன் பற்று சீட்டில் நகை கடன் ரூ.14,000/– வழங்கியதாக முதுநிலை எழுத்தர்/காசாளர் அனுமதித்து கையொப்பமிட்டுள்ளார். அந்த **பற்றுச் சீட்டு அ.சா.ஆ 123** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நகைக்கடன் பற்றுச் சீட்டில் கடன் வாங்குபவர் என்ற இடத்திலும் மற்றும் நகைக்கடன் பத்திரத்திலும், சங்கர் என கையொப்பம் உள்ளது. நகைக்கடன் விண்ணப்பம் இல்லை. 26.09.2013 அன்று சங்க தலைவர், இயக்குனர்கள், களமேலாளர் அரூர் மற்றும் சங்க பணியாளர்கள் ஆகியோர் முன்னிலையில் தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தீர்த்தமலை கிளை நகை மதிப்பீட்டாளர் திரு.ராம்குமாரை வைத்து பாதுகாப்பு பெட்டகத்தில் உள்ள அடமான நகைகளை 100 சதவீதம் இருப்பு பரிசோதனை செய்த போது மேற்படி சங்கர் என்பவர் பெயரில் வைக்கப்பட்ட அடமான நகைகள் போலி என்பதையும், பொய் ஆவணங்கள் தயாரித்து நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளதையும் அறிந்தேன். இந்த போலி நகைகள் என்னால் கைப்பற்றப்பட்டுள்ளது. திரு.சங்கர் என்பவரை விசாரிக்க அழைப்பாணை அனுப்பபட்டதில் விலாசத்தாரர் வேப்பம்பட்டியில் இல்லை என்று தெரிவித்து தபால் திரும்ப பெறப்பட்டுள்ளது. அந்த **திருப்பப்பட்ட தபால் அ.சா.ஆ.124** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதிலிருந்து மேற்கண்டவாறு போலி நகைகள் வைத்து கையிருப்பு குறைத்து கையாடல் செய்துள்ளது விசாரணையில் ஊர்ஜிதமாகிறது.

**3) கையாடல் ரூ.24,000/–**

13.10.2012 அன்றில் நகைகடன் எண்.2258 ன் படி திருமதி.கலைச்செல்வி என்பவரின் பெயரில் கட்டிங் மாடல் செயின் –1 அடமானம் பேரில் ரூ.24,000/– நகை கடன் வழங்கியதாக நகைகடன் பேரேடு பக்கம் 29/2 ல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. **கடன் எண்.2230 முதல் 2429 வரையுள்ள நகைகடன் பேரேடு பக்கம் 29/2 ல் பதிவுகள் அ.சா.ஆ.125** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நாள்வழிப்பேரேடு பக்கம் 246/2 ல் நகை கடன் ரூ.24,000/– வழங்கியதாக கையிருப்பு குறைக்கப்பட்டுள்ளது. **02.04.2012 முதல் 30.11.2012 வரையுள்ள நாள்வழிப்பேரேடு– 2 பக்கம் எண்.246 ல் ரூ.24,000/– அ.சா.ஆ.126** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நாள்வழிப்பேரேட்டினை திரு.முருகன் எழுத்தர்/முதுநிலை எழுத்தர்/ காசாளர் எழுதி இவர் மற்றும் செயலர் திருமதி.ஜெயந்தி இருவரும் கையொப்பமிட்டுள்ளனர். நகைக்கடன் பதிவேட்டில் எழுத்தர்/முதுநிலைஎழுத்தர்/காசாளர் மற்றும் நகை மதிப்பீட்டாளர் திரு.சி.சாமிஆச்சாரி ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர். கடன்தாரர் என்ற இடத்தில் எஸ்.கலைச்செல்வி என கையொப்பம் உள்ளது. நகை கடன் பற்று சீட்டில் நகை கடன் ரூ.24,000/– வழங்கியதாக

முதுநிலை எழுத்தர்/காசாளர் அனுமதித்து கையொப்பமிட்டுள்ளார். அந்த **பற்றுச் சீட்டு அ.சா.ஆ 127** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நகைக்கடன் பற்றுச் சீட்டில் கடன் வாங்குபவர் என்ற இடத்திலும் மற்றும் நகைக்கடன் பத்திரத்திலும், எஸ்.கலைச்செல்வி என கையொப்பம் உள்ளது. நகைக்கடன் விண்ணப்பம் பூர்த்தி செய்யப்படவில்லை. அந்த **பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பம் அ.சா.ஆ.128** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நகைக்கடன் விண்ணப்பத்தில் நகைக்கடனுக்கு பொறுப்பான செயலர், முதுநிலை எழுத்தர்/காசாளர் மற்றும் நகை மதிப்பீட்டாளர் எவரும் கையொப்பமிடவில்லை. 26.09.2013 அன்று சங்க தலைவர், இயக்குனர்கள், களமேலாளர் அரூர் மற்றும் சங்க பணியாளர்கள் ஆகியோர் முன்னிலையில் தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தீர்த்தமலை கிளை நகை மதிப்பீட்டாளர் திரு.ராம்குமாரை வைத்து பாதுகாப்பு பெட்டகத்தில் உள்ள அடமான நகைகளை 100 சதவீதம் இருப்பு பரிசோதனை செய்த போது மேற்படி எஸ்.கலைச்செல்வி என்பவர் பெயரில் வைக்கப்பட்ட அடமான நகைகள் போலி என்பதையும், பொய் ஆவணங்கள் தயாரித்து நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளதையும் அறிந்தேன். இந்த போலி நகைகள் என்னால் கைப்பற்றப்பட்டுள்ளது. திருமதி.கலைச்செல்வி என்பவரை விசாரித்ததில் இவரது 21.11.2013 ம் தேதியின் வாக்குமூலத்தில் கட்டிங் மாடல் செயின் –1 அடமானம் வைத்து ரூ.24,000/– கடன் பெறவில்லை என்றும், நகைகடன் பேரேடு, விண்ணப்பம் மற்றும் பற்றுசீட்டில் கையொப்பமிடவில்லை என்றும், இந்த கடனுக்கும் எனக்கும் எவ்வித தொடர்பு இல்லை என்று வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார் **கலைசெல்வி கொடுத்த வாக்குமூலம் அ.சா.ஆ.129** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதிலிருந்து மேற்கண்டவாறு போலி நகைகள் வைத்து குறைத்து கையாடல் செய்துள்ளது விசாரணையில் ஊர்ஜிதமாகிறது.

**4) கையாடல் ரூ.28,000/–**

18.10.2012 அன்று நகைகடன் எண்.2274 ன் படி திருமதி.சாந்தி என்பவரின் பெயரில் கட்டிங் மாடல் செயின் –1 அடமானம் பேரில் ரூ.28,000/– நகை கடன் வழங்கியதாக நகைகடன் பேரேடு பக்கம் 45/2 ல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. **கடன் எண்.2230 முதல் 2429 வரையுள்ள நகைகடன் பேரேடு பக்கம் 45/2 ல் பதிவுகள் அ.சா.ஆ.130** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நாள்வழிப்பேரேடு பக்கம் 251/2 ல் நகை கடன் ரூ.28,000/– வழங்கியதாக கையிருப்பு குறைக்கப்பட்டுள்ளது. **02.04.2012 முதல் 30.11.2012 வரையுள்ள நாள்வழிப்பேரேடு– 2 பக்கம் எண்.251 ல் ரூ.28,000/– அ.சா.ஆ.131** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நாள்வழிப்பேரேட்டினை திரு.முருகன் எழுத்தர்/முதுநிலை எழுத்தர்/காசாளர் எழுதி இவர் மற்றும் செயலர் திருமதி.ஜெயந்தி இருவரும்

கையொப்பமிட்டுள்ளனர். நகைக்கடன் பதிவேட்டில் எழுத்தர்/முதுநிலைஎழுத்தர்/காசாளர் மற்றும் நகை மதிப்பீட்டாளர் திரு.சி.சாமிஆச்சாரி ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர். கடன்தாரர் என்ற இடத்தில் சாந்தி என கையொப்பம் உள்ளது. நகை கடன் வழங்கியதற்கான பற்று சீட்டு மற்றும் நகை கடன் பத்திரம் இல்லை. 26.09.2013 அன்று சங்க தலைவர், இயக்குனர்கள், களமேலாளர் அரூர் மற்றும் சங்க பணியாளர்கள் ஆகியோர் முன்னிலையில் தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தீர்த்தமலை கிளை நகை மதிப்பீட்டாளர் திரு.ராம்குமாரை வைத்து பாதுகாப்பு பெட்டகத்தில் உள்ள அடமான நகைகளை 100 சதவீதம் இருப்பு பரிசோதனை செய்த போது மேற்படி சாந்தி என்பவர் பெயரில் வைக்கப்பட்ட அடமான நகைகள் போலி என்பதையும், பொய் ஆவணங்கள் தயாரித்து நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளதையும் அறிந்தேன். இந்த போலி நகைகள் என்னால் கைப்பற்றப்பட்டுள்ளது. திருமதி.சாந்தி என்பவரை விசாரிக்க அழைப்பாணை அனுப்பப்பட்டதில் அழைப்பாணையினை இவர் வாங்க மறுத்துவிட்டார் என தெரிவித்து தபால் திருப்ப பெறபட்டுள்ளது. அந்த **திருப்பட்ட தபால் அ.சா.ஆ.132** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதிலிருந்து மேற்கண்டவாறு போலி நகைகள் வைத்து குறைத்து கையாடல் செய்துள்ளது விசாரணையில் ஊர்ஜிதமாகிறது.

**<u>5) கையாடல் ரூ.22,000/–</u>**

03.11.2012 அன்றில் நகைகடன் எண்.2304 ன் படி திருமதி.சாந்தி என்பவரின் பெயரில் 'O' கொக்கி மைனர் செயின் –1 அடமானம் பேரில் ரூ.22,000/– நகை கடன் வழங்கியதாக நகைகடன் பேரேடு பக்கம் 75/2 ல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. **கடன் எண்.2230 முதல் 2429 வரையுள்ள நகைகடன் பேரேடு பக்கம் 75/2 ல் பதிவுகள் அ.சா.ஆ.133** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நாள்வழிப்பேரேடு பக்கம் 271/2 ல் நகை கடன் ரூ.22,000/– வழங்கியதாக கையிருப்பு குறைக்கப்பட்டுள்ளது. **02.04.2012 முதல் 30.11.2012 வரையுள்ள நாள்வழிப்பேரேடு– 2 பக்கம் எண்.271 ல் ரூ.22,000/– அ.சா.ஆ.134** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நாள்வழிப்பேரேட்டினை திரு.முருகன் எழுத்தர்/முதுநிலை எழுத்தர்/காசாளர் எழுதி இவர் மற்றும் செயலர் திருமதி.ஜெயந்தி இருவரும் கையொப்பமிட்டுள்ளனர். நகைக்கடன் பதிவேட்டில் எழுத்தர்/முதுநிலைஎழுத்தர்/காசாளர் மற்றும் நகை மதிப்பீட்டாளர் திரு.சி.சாமி ஆச்சாரி ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர். கடன்தாரர் என்ற இடத்தில் சாந்தி என கையொப்பம் உள்ளது. கடன் பற்று சீட்டில் நகை கடன் ரூ.22,000/– வழங்க சங்க செயலர் டி.ஜெயந்தியால் அனுமதித்து காசாளர் திரு.முருகன் வழங்கியதாக இருவரும் கையொப்பமிட்டுள்ளார். அந்த **பற்றுச் சீட்டு அ.சா.ஆ 135** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நகைக்கடன் பற்றுச் சீட்டில் கடன் வாங்குபவர் என்ற இடத்திலும் மற்றும் நகைக்கடன் விண்ணப்பத்திலும் சாந்தி என கையொப்பம் உள்ளது. நகைக்கடன் விண்ணப்பம் பூர்த்தி செய்யப்படவில்லை. **பூர்த்தி செய்யப்படாத நகைக்கடன் விண்ணப்பம் அ.சா.ஆ.136** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நகைக்கடன் விண்ணப்பத்தில் நகைகளுக்கு பொறுப்பான செயலர், முதுநிலை எழுத்தர், காசாளர், நகை மதிப்பீட்டாளர் எவரும் கையொப்பம் இடவில்லை. 26.09.2013 அன்று சங்க தலைவர், இயக்குனர்கள், களமேலாளர் அரூர் மற்றும் சங்க பணியாளர்கள் ஆகியோர் முன்னிலையில் தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தீர்த்தமலை கிளை நகை மதிப்பீட்டாளர் திரு.ராம்குமாரை வைத்து பாதுகாப்பு பெட்டகத்தில் உள்ள அடமான நகைகளை 100 சதவீதம் இருப்பு பரிசோதனை செய்த போது மேற்படி சாந்தி என்பவர் பெயரில் வைக்கப்பட்ட அடமான நகைகள் போலி என்பதையும், பொய் ஆவணங்கள் தயாரித்து நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளதையும் அறிந்தேன். இந்த போலி நகைகள் என்னால் கைப்பற்றப்பட்டுள்ளது. திருமதி.சாந்தி என்பவரை விசாரித்ததில் இவரது 21.11.2013 ம் தேதிய வாக்குமூலத்தில் 'O' கொக்கி மைனர் செயின் –1 அடமானம் வைத்து ரூ.22,000/– கடன் பெறவில்லை என்றும், நகை கடன் பேரேடு, விண்ணப்பம் மற்றும் பற்றுச் சீட்டில் கையொப்பமிடவில்லை என்றும்,இந்த கடனுக்கும் எனக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். அந்த **வாக்குமூலம் அ.சா.ஆ.137** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதிலிருந்து மேற்கண்டவாறு போலி நகைகள் வைத்து கையிருப்பு குறைத்து கையாடல் செய்துள்ளது விசாரணையில் ஊர்ஜிதமாகிறது.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)**

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.